*18*

# பலஸ்தீனத்தின் எல்லாப் பகுதிகளிலும் முடிவு ஊழியம்

## *கூடாரப் பண்டிகையிலிருந்து பெத்தானிக்கு வருதல் வரையிலும்*

*இயேசுவின் ஊழியத்தின் இந்தக் கால கட்டமானது பஸ்காவுக்கு முந்திய ஆறு நாட்கள் தவிர, அக்டோபர் முதல் ஏப்ரல் வரையுள்ள 6 மாத காலத்தில் நடைபெற்றதாகும். இதற்கு முந்திய ஆறு மாதங்களில் இயேசு தேடப்பட்டவராய் இருந்தார். நாம் அவரை வரிசையாக எருசலேமில், யூதேயா நாட்டில், மீண்டும் எருசலேமில், பெரேயாவில் மற்றும் எருசலேமுக்கு அருகில் பெத்தானியாவில் மீண்டும் ஒருமுறை பெரேயாவில் காண்போம், மற்றும் சமாரியா கலிலேயாவின் வழியாக சாத்தியக் கூறுள்ள ஒரு பயணத்திலும், எருசலேமின் சுற்றுப் புறங்களுக்கு கடைசியாகத் திரும்பி வருதலிலும் அவரைக் காண்போம்.*

***1. எருசலேமில்; கூடாரப் பண்டிகையின் வேளையில்*** *(யோவா. 7:10; 10:20).—எருசலேமில் இயேசுவின் வருகைகளின் போது வழக்கமாக உள்ளது போலவே இங்கு(ம்) யோவான் சுவிசேஷமே நமக்கு அதிகாரத்துவ முடையதாக உள்ளது. அவர் கலிலேயாவை விட்டுப் புறப்படு முன்னர், இயேசுவின் உறவினர்கள் அவரைப் பண்டிகைக்குச் செல்லும் பயணிகளின் கூட்டத்துடன் சேர்ந்து கொள்ளுமாறும் நாட்டின் தலைநகரான அங்கு அவர் தமது மேசியாத்துவத்தை அறிவிக்கும்படியாகவும் வற்புறுத்தினர். ஆனால் இயேசு தம் சொந்தத் திட்டங்களை வைத்திருந்தார். அவர் தமது நண்பர்களின் உலகப்பிரகாரமான நம்பிக்கைகளுக்கு இணங்கி அவர்களை அபாயத்திற்கு உள்ளாக்க மாட்டார் அல்லது தமது எதிரிகளுடன் காலத்துக்கு முந்திய போராட்டத்தில் இறங்கி விடமாட்டார். பஸ்காவுக்கு இன்னும் ஆறு மாதங்கள் இருந்தன, அப்போது அவர் உலகின் உண்மை யான பஸ்காவாக தம்மைத் தாமே மனமுவந்து கையளிப்பார். எனவே அவரது உறவினர்கள், அவர் பின் தொடர்ந்து வருவாரோ இல்லையோ என்பதை அறியாமலேயே பண்டிகைக்குக் கூட்டமாய்ச் சென்றனர். எருசலேமில் எல்லாருடைய உதடுகளிலிருந்தும் ஒரு கேள்வி வெளிப் பட்டது: "அவர் எங்கே இருக்கிறார்?," கடைசியாக, பண்டிகையின் நடுவில் இயேசு தனியாக எருசலேமுக்கு வந்தார், நேராக தேவாலயத்திற்குச் சென்று போதிக்கத் தொடங்கினார். அவர் ரபீக்களின் பள்ளிகளுடைய மொழியில் பேசாததால், ரபீக்கள் களங்கப்படுத்தப்பட்டனர்; ஆனால் அவர் பயமின்றி*

*தொடர்ந்து செயல்பட்டார். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணைப் பற்றிய*[1] *ஒரு நிகழ்ச்சி எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பிறவியிலேயே பார்வையற்றிருந்த ஒரு மனிதரைக் குணமாக்கிய ஒரு அற்புதம் நடைபெற்றது, இது ஓய்வு நாளில் செய்யப்பட்டதால் மாபெரும் குற்றச்சாட்டு ஏற்படக் காரணமாயிற்று. யூதர்கள் அவரைக் கல்லெறிந்து கொல்லத் தேடுமளவுக்கு விஷயம் தீவிரமாயிற்று. நல்மேய்ப்பனின் அழகிய உருவகத்தின் கீழாக இயேசு தாம் மனமுவந்து தமது மந்தைக்காக உயிரைக் கையளிக்கப் போவதாகவும், மீண்டும் உயிரோடு எழுந்திருக்கப் போவதாகவும் அறிவிக்கின்றார்.*

***2. யூதேயாவின் நாட்டுப்புற மாகாணங்களில்.***—*இயேசு, எருசலேமின் யூதர்களுடைய சூழ்ச்சிகளுக்கு முன்பாக ஓய்ந்திருந்து நகருக்கருகில் ஒரு சில வாரங்களைச் செலவிட்டார். ஒரே ஒரு அற்புதம்—இன்னொரு ஓய்வுநாளில் குணமாக்குதல்—பதிவு செய்யப்பட்டுள்ளது; ஆனால் அவர் அறிவுறுத்தல் களில் ஆச்சரியமான செல்வத்தை ஊற்றுகின்றார். அதன் பகுதிகளாக உள்ள மாதிரி ஜெபம், கடுகு விதையின் உவமை, மற்றும் புளித்த மாவின் உவமை ஆகியவை முந்திய கலிலேயப் பாடங்களை மறுபடி கூறுதலாக இருக்கின்றன. இரு அழகிய உவமைகள்—மதியீனனாயிருந்த செல்வந்தன் மற்றும் நல்ல சமாரியன்—புதியதானவைகளாகவும், லூக்காவுக்கே புதுமையானவைகளாகவும் உள்ளன, நாம் இவ்விரு மாதங்களின் வரலாற்றிற்கு இவருக்கே கடன்பட்டுள்ளோம்.*

*ஆனால் இயேசு தாம் தனிப்பட்ட வகையில் செய்யக்கூடிய இப்படிப் பட்ட சுவிசேஷ ஊழியத்துடன் திருப்தியடைந்து விடவில்லை. காலம் குறுகியதாயிருந்தது, செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக எஞ்சி யிருந்தன. கலிலேயாவில் பன்னிருவரை அனுப்பியது போன்றே இப்பொழுது அவர் யூதேயாவில் எழுபது பேர்களை அனுப்புகின்றார். அவர்கள் பழைய செய்தியையே அறிவிக்கும்படி கட்டளையிடப்படுகின்ற னர்: "மனந்திரும்புங்கள், (பரலோக) இராஜ்யம் சமீபித்திருக்கிறது."*[2]

*இந்தக் காலகட்டத்தில் தான் நாம் பெத்தானியா சகோதரிகளைப் பற்றிய நமது முதல் சிறு குறிப்புகளைப் பெறுகின்றோம் (லூக். 10:38-42): மரியாள் எஜமானருடைய பாதங்களின் கீழ் அமர்ந்திருந்தாள், மார்த்தாளோ "உபசரிப்புப் பணிகளால் தடை செய்யப்பட்டிருந்தாள்."*[3]

***3. எருசலேமில்; (தேவாலய) பிரதிஷ்டைப் பண்டிகை*** *(யோவா. 10:22-42).—கூடாரப் பண்டிகைக்கு இரு மாதங்கள் பிந்தி, நமது டிசம்பர் மாதத்தில் இயேசு பிரதிஷ்டைப் பண்டிகைக்கு எருசலேமுக்குத் திரும்பி வந்தார். அவரை சாலொமோன் மண்டபத்தில் எதிர்கொண்ட யூதர்கள் அவர் மேசியாவா அல்லவா என்பதை வெளிப்படையாகக் கூறும்படி வற்புறுத்தினார்கள். இயேசு, தமது வெளியரங்கமான உறுதிப்பாடானது, தம் சொந்த வாழ்வு மற்றும் ஊழியத்தின் ஆதாரத்திற்கு சுயமாய்ப் பார்வையற்றுப் போன மனிதர்களிடத்தில் சிறிதளவே மதிப்புடையதாக இருக்கும் என்பதை நன்கு அறிந்திருந்தும் நேரடியான பதில் கூற மறுத்து விட்டார். அவரைக் கொல்வதற்கு அவர்கள் மீண்டும் ஒருமுறை கற்களை எடுத்துக் கொண்டனர். கப்பர்நகூம் மற்றும் கலிலேயா போன்றே*

எருசலேமும் யூதேயாவும் மீண்டும் ஒருமுறை அவரது போதனைக்குச் செவியை மூடிக் கொண்டன. இன்னும் ஒரு மாநிலம் அவருக்குத் திறந்திருந்தது, அது யோர்தானுக்கு அப்பால் இருந்த பாதி புறதெய்வ வழிபாட்டு மாநிலமான பெரேயாவாகும். இயேசு அவ்விடம் நோக்கித் தமது முகத்தைத் திருப்பினார்.

***4. பெத்தானியில்: லாசருவை உயிரோடெழுப்புதல்*** *(யோவா. 11:1-54).* —பெரேயாவில் இயேசுவின் ஊழியம் லாசருவின் மரணத்தால் தடைப்படுகின்றது. பெத்தானியிலிருந்த ஒரு சிறு வட்டாரத்தைப் பற்றி அதிகம் அறிந்து கொள்ள நாம் மகிழ்வடைவோம். இயேசுவின் மாபெரும் இருதயமானது உலகம் முழுவதையும் தன்னகத்தே ஏந்திக் கொண்டது; இருப்பினும், தனிப்பட்ட வகையான மென்மையுடன் அவர் "மார்த்தாளையும் அவள் சகோதரியையும், லாசருவையும்" அன்புகூர்ந்தார்.[4] அந்த இல்லத்திற்கு அவர் பதிவு செய்யப்படாத பல வருகைகளை மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். மரித்துக் கொண்டிருந்த தம் நண்பரையும், துக்கப்பட்டுக் கிடந்த சகோதரிகளையும் விட்டு தொலைவில் அவர் பெரேயாவில் இருக்கும்படி செய்த விஷயம் மாறுபாடுள்ளதல்ல. பல நூற்றுக்கணக்கானவர்களைக் குணமாக்கியது போல அவரை (லாசருவை) குணமாக்கவும் அவர் திரும்பி வந்திருந்தால் அவர்களும் நாமும் கூட எவ்வளவு விஷயங்களைத் தவற விட்டிருப்போம்! கடைசியில் அவர், அவர்களுடன் அழவும், உடைந்து போன இருதயங்களிலிருந்து அவர்களின் விசுவாச அறிக்கையைப் பெறவும், துக்கமுற்ற எண்ணிறந்த ஆத்துமாக்கள் சாயக் கூடிய அந்த வார்த்தைகளைக் கூறவும் திரும்பி வந்தார்: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்,"[5] மற்றும் அவர் தம் செயல்களினால் தம் வார்த்தைகளைச் செயல்விளக்கப்படுத்தவும் திரும்பி வந்தார். இயேசு பெரேயாவிலிருந்து திரும்பி வருதல் மற்றும் அவர் லாசருவை மரித்தோரில் இருந்து உயிர்ப்பித்தல் ஆகியவைகளைக் கொண்ட அத்தியாயத்தைத் தவற விட்டிருந்தால் அது இந்த உலகிற்கு நலம் அளித்திருக்காது.

எருசலேமுக்கு அவ்வளவு அருகில் நடந்த அவ்வளவு வியப்புக்குரிய அற்புதமானது ஒரு கலக்கத்தை ஏற்படுத்தத் தவற முடியாமல் போயிற்று. பலர் அவர் மீது விசுவாசம் கொண்டனர்; ஆனால் வானத்திலோ அல்லது பூமியிலோ உள்ள எந்த ஒரு வல்லமையும் மாய்மாலக்காரப் பரிசேயர்களையோ அல்லது சூதுமிக்க சதுசேயர்களையோ விசுவாசிக்கும்படிக் கட்டாயப்படுத்த முடியாதிருந்தது. அபாயமிக்க இந்த அற்புதத்தில் பட்டய முனையில் பல கேள்விகளைச் சுட்டி காண்பித்த நிலையில், அவர்கள் ஒரு கேலி செய்ய ஒரு பொதுவான களத்தைக் கண்டறிந்தார்கள். பிரதான ஆசாரியரான காய்பா என்பவரின் ஆலோசனையில் செயல்பட்ட (ஆலோசனை) சங்கம் அவருக்கு மரணத்தை ஆணையிட்டது. உயிருடன் இருந்த லாசரு பதில் அளிக்க முடியாத விவாதமாயிருந்தார், மற்றும் அவர்கள் லாசருவுக்கும் அதே தண்டனையளிப்பது பற்றிப் பேசினார்கள். ஆகையால் இயேசு எப்பிராயீமில் தங்கியிருந்தார், அங்கிருந்து மீண்டும் ஒருமுறை பெரேயா சென்றார், இம்முறை அவர் பெரும்பாலும் சமாரியா மற்றும் கலிலேயாவின் தென்பகுதியினூடாகப் பயணித்திருப்பார்.

***5. பெரேயாவில் ஊழியம்*** (லூக். *13:22-17:10; மத். 19-20:28).*— *பெரேயாவில் இயேசு ஒப்பீட்டளவில் ஒரு புதிய களத்தினுள் பிரவேசித்தார். இது யோவானின் மிகத் தொடக்க கால ஊழியத்தின் காட்சியாய் இருந்தது (யோவா. 10:40; இ.வ. 1:28); மற்றும் யோவான் விதைத்திருந்ததை இயேசு சந்தேகமின்றி அறுத்தார், ஏனெனில் இங்கு அவரது ஊழியம் இதற்கு முன்பு கலிலேயாவில் பெற்றிருந்த வெற்றியைப் பெற்றது (யோவா. 10:41, 42). பெரேயாவில் (இச்சமயத்தில்) ஒரு அற்புதமாவது செய்யப்பட்டதாகக் குறிப்பிடுதல் என்பது சந்தேகத்திற்குரியதாக உள்ளது; ஆனால் தனிப்பட்ட மற்றும் மென்மையான உற்சாக உணர்வு அடையாளப்படுத்திய போதனை அமைப்பொன்று நமக்கு வந்துள்ளது. இங்கு உவமைகளின் இரண்டாவது தொகுதி உரைக்கப்பட்டது, இது லூக்காவினால் மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது: மாபெரும் விருந்து, காணாமற் போன ஆடு,[6] காணாமற் போன காசு, ஊதாரி மகன், அநீதியான உக்கிராணக்காரன், செல்வந்தனும் லாசருவும், விடாது வற்புறுத்திய விதவை, மற்றும் பரிசேயனும் ஆயக்காரனும். திராட்சத் தோட்டத்தில் வேலை செய்பவர்கள் பற்றிய உவமையை மத்தேயு கூடுதலாய்க் கூறுகின்றார். ஒப்பீட்டு சுவிசேஷ எழுத்தாளர்கள் யாவரும், இயேசு சிறுபிள்ளைகளை ஆசீர்வதித்தது மற்றும் செல்வமிக்க இளம் வயதுள்ள அதிகாரி ஆகிய நிகழ்ச்சிகளைத் தருகின்றனர். அவர்கள் யோர்தானுக்கும் எருசலேமுக்கும் அருகில் நெருங்கிய முடிவு வேளையின் சமீபத்தில், யாக்கோபும் யோவானும் இயேசுவின் வலது புறத்திலும் இடது புறத்திலும் அமரும் பெரு விருப்பம் கொண்ட வேண்டுகோளுடன் வந்தனர். அவர்கள் கிரீடங்களைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தனர்; அவரோ சிலுவையை முன்னாக நோக்கிக் காத்திருந்தார். இயேசு பெரேயாவை விட்டு, யோர்தானை எரிகோவுக்கு அருகிலிருந்த வழக்கமான துறையில் கடந்து வந்தார். பழைய நகருக்குள் அவர் கடந்து செல்லுகையில் பார்வையற்ற பர்த்திமேயு பார்வை பெற்றார், ஆயக்காரராயிருந்த சகேயு ஆழமான குணத்தைப் பெற்றார், இது கிறிஸ்து கொண்டு வந்த மிக மேன்மையான ஊழியமாய் உள்ளது. செங்குத்தான உயரத்தில் கிளம்பிச் சென்ற இயேசு பஸ்காவுக்கு ஆறுநாட்கள் முன்னதாக பெத்தானி என்ற புறநகர்ப்பகுதியின் கிராமத்தைச் சென்றடைந்தார். நீண்ட பயணங்கள் முடிகின்றன; முடிவு சமீபமாய் உள்ளது.*

---

*குறிப்புகள்*

*[1]இந்த நிகழ்ச்சி பழைய கைப்பிரதிகளில் இல்லை, ஆனால் அநேகமாக இது யோவான் சுவிசேஷத்தின் பகுதியாய் இராவிட்டாலும், வரலாற்றுப் பூர்வமானதாக இருக்கலாம். [2]மத். 3:2; 4:17; மேலும் மாற். 1:14ஆ, 15லும் காணவும். [3]லூக். 10:40. [4]யோவா. 11:5. [5]யோவா. 11:25. [6]மத். 18:12-14லும் கூறப்பட்டுள்ளது.*